அவர்களோடு மீண்டும் கலந்து பேசுவது என்று சொல்லப் பட்டிருக்கிறது. தற்போது புதிதாக வரி மாற்றப்பட்டதன் மூலம் ஏதேனும் பிரச்சினைகள், சிரமங்கள் அல்லது கணக்கு வழக்கு பராமரிப்பதில் புதிய சிரமம் ஏற்படுமானால் அதனை எந்த வகையில் அரசு தவிர்க்க இயலும் என்பதை அவர்களுடைய கோரிக்கைகளை முழுமையாக கேட்டு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) விடுமுறைக் காலத்தில் சத்துணவு வழங்கப்படாது என்ற செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த பிரச்சினை. திரு. சி. ஞானசேகரன். சத்துணவுக் கூடங்கள் பற்றிய பிரச்சி னையை மட்டும் சுருக்கமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும். நீங்கள் எழுதிக் கொடுத்தபடி அப்படியே தெரிவிக்க வேண்டும்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி ஒரு மனிதனுக்கு உணவு இல்லையெனில் ஜகத் தினை அழித்திடுவோம் என்று சொன்னார் பாரதி. ஏழைக் குழந்தைகளின் துயரைத் துடைப்பதற்காக கொண்டு வரப்பட்ட இந்த சத்துணவுத் திட்டத்தில் விடுமுறை நாட்களிலும் கூட சத்துணவு வழங்கப்படும் என்று ஏற்கெனவே இந்த மாமன்றத் தில் அறிவிக்கப்பட்டு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் காலத்திலிருந்து அது நடைமுறைப்படுத்தப்பட்டு வந்து கொண் டிருந்தது. ஆனால் இந்த சத்துணவுக் கூடங்களில் பள்ளிகளிலே 2-5-1994ஆம் தேதி முதல் உணவு வழங்கப்படக் கூடாது என்று சத்துணவு அமைப்பாளர்களை எல்லாம் அழைத்து அதிகாரிகள் கையெழுத்து வாங்கிக் கொண்டு 2-ஆம் தேதியி லிருந்து பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படாத நிலை இருக்கிற காரணத்தால் தமிழகத்தில் பல லட்சக்கணக்கான ஏழை எளிய மாணவர்கள் இன்று உணவின்றி வாடுகிறார்கள். ஆகவே மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இம்மாமன்றத்தில் அறிவித்ததைப் போல் பள்ளி விடுமுறை நாட்களிலும்கூட சத்துணவுக் கூடங்களில் சத்துணவு வழங்க ஆவன செய்வாரா என்று அறிய விரும்பு கிறேன்.

[illegible] [1994 மே 5

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்கள் 3 வகைகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று பள்ளிக்கூட சத்துணவு மையம். இன்னொன்று பால்வாடி சத்துணவு மையம். இன்னொன்று குழந்தைகள் சத்துணவு மையம். இதிலே பள்ளிக்கூட சத்துணவு மையங்கள் விடுமுறைக் காலங்களில் மாணவர்கள் ஊருக்குச் சென்று விடுகிறார்கள். கோடை விடுமுறை ஏப்ரல், மே ஜூன் வருகின்றபோது பரிட்சை முடிந்தவுடன் அவர்கள் வெளி ஊருக்குச் சென்று விடுகிறார்கள். ஆனால் அரசைப் பொறுத்தமட்டில் இந்த மாணவர்கள் பள்ளிக்கூடங்கள் மூடி இருக்கின்ற நேரத்தில்கூட எந்த இடத்திலே சத்துணவு சாப்பிடுவதற்கு அதிகமான அளவில் வருகை தந்தாலும் அங்கே சத்துணவு வழங்க வேண்டும் என்கின்ற உத்தரவைத்தான் அரசு பிறப்பித்திருக்கிறதே தவிர மாணவர்கள் வந்தால் சத்துணவுக் கொடுக்கக்கூடாது என்று எந்த உத்தரவையும் அரசு பிறப்பிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே அவையிலே காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இந்த கோரிக்கையை போன சட்டமன்றத்தின் போது வைத்தார்கள். விடுமுறைக் காலங்களில் மாணவர்களே வருவதில்லை. சத்துணவை நிறுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அப்போதும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அனுமதியோடு எந்த காரணத்தைக் கொண்டும் கோடை விடுமுறை நாட்களில் சத்துணவு நிறுத்தப்படமாட்டாது என்பதைத் தெளிவாகத் தெரிவித்து இருக்கிறேன்.

தனி ஒரு மனிதனுக்கு உணவு இல்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்று சொன்ன பாரதியாருடைய பாட்டிற்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்த ஒரே தலைவி புரட்சித் தலைவி அவர்கள்தான். ஆகவே, எந்த காரணத்தைக் கொண்டும் இந்தச் சத்துணவு நிறுத்தப்படவில்லை. எங்காவது மாணவர்கள் வரவே இல்லை என்றால் எங்காவது சத்துணவுப் பணியாளரும் போய் இருக்க மாட்டார்கள். பள்ளிக்கூடமே மூடியிருந்து இருக்குமேயொழிய குழந்தைகள் வந்து மாணவர்கள் வந்து எந்த இடத்திலேயும் சத்துணவுப் பணிகள் நிறுத்தப்படவில்லை. அப்படி ஏதாவது இருந்து அரசின் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பகுதியைச் சொல்வார்களேயானால் தகுந்த நடவடிக்கையைக் கண்டிப்

பாக இந்த அரசு எடுக்கும் என்றும், அப்படி எந்த உத்தரவையும் அரசு பிறப்பிக்கவில்லை என்பதையும் நான் திரும்ப தெரிவித்துக் கொள்கிறேன்.

வதந்திகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு பேசி பழக்கப் படுகின்ற வழக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்துக்கொள்ள வேண்டாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. நீங்கள் ''ஃபேக்ட்'' என்று சொன்னால், அதற்கு வேண்டிய ஆதாரம் வேண்டும். நீங்கள் நிறுத்தியிருக்கிறார்கள் என்கின்றீர்கள், ஆனால், அந்தமாதிரி நிறுத்தக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். மாணவர்கள் வந்தால் சத்துணவு வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவு இருக்கிறது. (குறுக்கீடு) இல்லை. இதை வைத்து எங்காவது நிறுத்தினார்கள் என்றால் நீங்கள் போய் கேட்கவேண்டும். (குறுக்கீடு) நீங்களே போய் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இதிலே முழு உரிமை, முழுப் பங்கு ஒத்துழைக்கக்கூடிய முழு வாய்ப்பு இருக்கிறது. குழந்தைகளுக்குச் சோறு போடவேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய அக்கறை மட்டுமல்ல, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் உள்ள அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இதிலே பெரிய அக்கறையும் இருக்கிறது. அவர்கள் பணியாற்றுவதற்குரிய வாய்ப்பும் இருக்கிறது. ஏதாவது குறிப்பிட்ட இடத்தில் அப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்றிருந்தால், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறேன். ஆனால், எந்த இடத்திலேயும் இப்படிப்பட்ட குழந்தைகள் வந்தால் சோறு போட வேண்டாம் என்ற உத்தரவை அரசு பிறப்பிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) கோவை மாவட்டத்தில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு ஆளியாற்றிலிருந்து தண்ணீர் விட வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர், அடுத்த பிரச்சினை, திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கோவை மாவட்டம் வறட்சிப் பிடியிலே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. இன்றைய தினம்